சிவமயம்

Registered as a Newspaper in Ceylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ம் திகதி ஆரம்பமானது.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருசு] யாழ்ப்பாணம்:—தாரணவருஷம் புரட்டாதிமீ உசஉ (1944 ஒக்டோபர்மீ 9 திங்கட்கிழமை) [இல ருக


# ஜெர்மன் சைநியங்கள் எல்லா வரங்கங்களிலும் மூர்க்கமாகத் தாக்குகின்றன

## ஷெல்ற் பொக்கெற்றில் மும்முரமானயுத்தம்

### சில இடங்களில் நேசதேசப்படைகள் 1000 யார் ஜெர்மனிக்குட் பிரவேசித்து விட்டன

ஜெர்மன் படைகள் சென்ற 24 மணி நேரத்திற்குள்ளாக எல்லா வரங்கங்களிலும், ஏராளமாகவும் மும்முரமாகவும் தாக்க வாரம்பித்துள்ளார்கள். அன்ரிவார்ப்பின் வடபகுதியைத் தவிர்த்து மற்றுமிடங்களி லெல்லாம் ஜெர்மானியரின் திரும்பித் தாக்கும் முறை சில பலன்களை யடைந்துள்ளது.

லண்டன், அக் 7

ஷெல்ற் பொக்கெற்றிலும் ஆச்சனுக்குத் தெற்கு வடக்குப் பிரதேசங்களிலும், மெற்ஸ் பகுதியிலும் மிக மும்முரமான யுத்தம் நடைபெறுகின்றது.

ஜெர்மானியரின் 64வது தரைப் படை, புலாகஸ், எக்லூ அரங்கங்களிலுள்ள கனேடியச் சைநியங்களை மிக மூர்க்கமாக எதிர்க்கின்றன.

சில இடங்களில் நேசதேசச் சைநியங்கள் 1000 யார் உட்சென்று மிகவும் எதிர்த்துப் போர் செய்கின்றார்கள்.

ஊபாச் பிரதேசத்தில் பில்பொக்ஸெல்களிலிருந்து மிகவு மகடுமையான எதிர்த் தாக்குதல்கள் வருகின்றன.

ஜெனறல் ஹொட்ஜஸுடைய சைநியங்கள் மிகவும் ஆறுதலாக முன்னேறிவருகின்றன. பெக்கென்டோர்வுக்கு வடகிழக்கேயுள்ள பட்டினங்களில் சில இலாபங்களை யடைந்துள்ளார்கள்.

அமெரிக்கப்படைகள் பெக்கென்டோர்வுக்குக் கிழக்கே முன்னேறி வருகின்றனர்.

ஆச்சன் பகுதிக்குத் தென் கிழக்கே அமெரிக்கப் படைகள் விமானங்களினுதவியுடன் கேட்க்ஸ் பிரதேசத்தைத் தாக்க வாரம்பித்து விட்டது.

ஜெர்மானியருடைய எதிர்த்தாக்குதலில்லாத இடமாகிய வட ஆன்ரிவார்ப்பில் கனேடியக்காலாட்படைகள் அரைமைல் முன்னேறியுள்ளார்கள்; இன்னும் ஐந்து மைல் உட்சென்றால் ஜெர்மன்படைகள் விலகி யோடமுடியாத நிலைமையேற்படுமாம்.

ஏமன்ஸ்டோர்ப்புக்குத்தென்கிழக்கே, ரூட்ஜெனவில் ஜெர்மானியர் ஒரு சிறு பகுதியைக் கைப்பற்றியுள்ளார்கள்.

### டென்மார்க் இளவரசர் மரணம்

டென்மார்க்கின் கஸ்டாவ் இளவரசர் இருதயநோய் காரணமாகத் திடீரென்று காலகதியடைந்துவிட்டாரென்று ஜெர்மன் செய்தி ஸ்தாபனம் இன்றிரவு அறிவித்தது.

இரண்டு நாட்களுக்குமுன் கஸ்டாவ் இளவரசர் கடுமையான இருதய நோயினால் பீடிக்கப்பட்டாரென்றும் இடையில் அவர் கொஞ்சம் சுகமாகிக்கொண்டு வந்து நேற்றிரவு திடீரென்று மரணமானரென்று அந்த ஸ்தாபனம் அறிவித்தது.

டென்மார்க்கின் மன்னரான கிறிஸ்டியனின் இளைய தம்பியான கஸ்டாவ் இளவரசருக்கு இப்போது 57 வயதாகிறதென்றும் அறியப்படுகிறது.

### றூஸ்வெல்டின் பிரசங்கம்

ஜனாதிபதி தமது தேர்தல்பிரசங்கத்தில் மேலும் பின்வருமாறு கூறியதாக வாஷிங்டன் செய்தியொன்று அறிவிக்கிறது:-

"ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு அமெரிக்க அரசினர் சுபீட்சமடைந்து வந்து இப்போது அது பலத்தின் உச்சஸ்தானத்தை அடைந்திருக்கிறது. சில மாகாணங்களில் வாக்குரிமையளிப்பது சம்பந்தமாக ஜனநாயகத்துக்கு முரண்பட்ட சிலசட்டங்கள் இருப்பது உண்மைதான், இவை பொதுஜன அபிப்பிராயத்தைச் சுதந்திரமாக வெளியிடத் தடுப்பதால் அவை அநீதியானவையாகும்.

ஜாதி, நிற, குல பேதங்களில் எல்லாஅமெரிக்கர்களுக்கும் அபிப்பிராயம்கூற இடமிருக்கவேண்டும். எவ்வளவு சீக்கிரம் இந்த அரசியல் சமத்துவம் நமக்குக் கிடைக்கிறதோ அவ்வளவுக்கு தேசத்துக்கு நன்மையுண்டு.

ஒரு சிறிய தொகையான வாக்குச்சீட்டுகளை அதிகப்படியாகப் பெற்று அமெரிக்காவின ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவதை நான் விரும்பவில்லை. அதே போல ஒரு பெருந்தொகையான வாக்குச்சீட்டுக்களால் தோல்வியடைந்தால் நான் சொந்தமுறையில் சந்தோஷப்படுவேன். ஒவ்வொருவரும் தன்னிஷ்டப்படி சுயேச்சையாகத் தன் பரிசுத்த உரிமையை உபயோகிக்க வேண்டும்."

இந்தப் பிரசங்கம் வைட்ஹௌஸிலிருந்து ரேடியோமூலம் நிகழ்த்தப்பட்டதாகும்.

### சங்காபிஷேகம்

வருகிற புதன்கிழமை (11-10-44) மாலை 6 மணி வரையில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் அஷ்டோத்தரசகஸ்ரசங்காபிஷேகம் நடைபெறுமென ஷை கோவில் ஆதீனகர்த்தர் தெரிவிக்கின்றார்.

## "தேர்தலிற் றகாத சொற்பிரயோகம்

### நாட்டின் மனோவுறுதியைக் குலைக்கவே"

வாஷிங்டன், அக் 5

வாஷிங்டனில் ஜனநாயக தொழிலாளிகளுக்கு மத்தியில் ஜனாதிபதி றூஸ்வெல்ட் இன்று தமது இரண்டாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தை நடத்தினர். அப்போது அவர் கூறியதாவது:-

"சில ஜனங்கள் மானிட உரிமைகளைவிட ஸ்தூல செல்வத்தை அதிகம் விரும்புகிறார்கள். ஒரு சுதந்திரமான தேர்தல் நமது சமுதாயத்தை என்றுமே பாதுகாக்குமென்பதை அவர்கள்தெரிந்திருந்தாலும் வீண் பீதியைக் கிளப்புகிறார்கள்.

"ஜனாதிபதி தேர்தலில் சிலர் கொஞ்சமும் பொறுப்பில்லாமல் உதாசீனமான வார்த்தைகளைப் பிரயோகிக்கிறார்கள். போர்க்கோலம் பூண்டிருக்கும் அமெரிக்க படைகளினதும் உள்நாட்டிலிருக்கும் அவர்களின் குடும்பத்தினரதும் மனோ உறுதியைக் குலைப்பதற்காகவே இவர்கள் இந்த வார்த்தைகளைப் பாவிக்கிறார்கள். சில அரசியல் பிரசாரகர்கள் இந்தத் தேசியத் தேர்தலில் பயமுறுத்தலைக் கையாளுகிறார்கள்."

### குடியரசுக் கட்சியின் போக்கு

பதின்மூன்று குடியரசுக் கட்சி, காங்கிரஸ் அங்கத்தவர்கள் தங்களுக்களிக்கப்பட்ட சலுகையைத் துஷ்பிரயோகம் செய்து தபால் முத்திரைகளொட்டாமல்லட்சக்கணக்கான கடிதங்களை அனுப்பிவருவதாகவும் அக்கடிதங்களில் பொதுவுடைமை, நாட்டில் பரவி வருகிறதென்றும் ஜனநாயகத்தைப் பொதுவுடைமைவாதிகளுக்கு விற்றுவிட றூஸ்வெல்ட் நிர்வாகம் பகுதிபற்றி வருகிறதென்றும் குறிப்பிடப்பட்டிருப்பதாகவும் திரு. றூஸ்வெல்ட் கூறிவிட்டு, சர்க்கார் அச்சியந்திரசாலையிலேயே இந்தத் துண்டுப் பிரசுரம் 30 லட்சம் பிரசுரிக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

"இந்த விதமான பீதிப் பிரசாரங்கள் ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காக அதனிடம் பயபக்திகொண்டவர்களுக்குப் புதிதானதல்ல" என்றும் அவர் கூறினார்.

### யுத்த நிலைமை

அவர் மேலும் கூறியதாவது:-

"நமது நாகரீகத்தைப் பாதுகாப்பதற்காக நாம் நடத்தும் போராட்டம் இன்னும் முடிந்துவிடவில்லை யென்று நான் கூறுவது சொன்னதையே திருப்பிச் சொல்வதாக இருந்தாலும் அப்படிக் கூறுவது என் கடமையென்று நான் கருதுகின்றேன். நமது படைகளும் நமது நேசநாடுகளின் படைகளும் ஐரோப்பாவில் சத்துருவைத் தாக்கிக்கொண்டிருக்கின்றன, ஜெனரல் ஐசன்ஹோவர் தலைமையின் கீழுள்ள நேசப்படைகள் ஐரோப்பா சரித்திரத்திலேயே மகத்தான ஒரு வேலையை நான்கு மாதங்களுக்கு முன் ஆரம்பித்து இப்போது நடத்தி வருகின்றன."

"பசிபிக்கில் நமது கடற்படைகள் ஹார்பருக்குமேற்கே 5000 மைல் முன்னேறிச் சென்றிருக்கின்றன, அப்படியிருந்தும் ஜெர்மன், ஜப்பானிய எதிர்ப்புணர்ச்சி இன்னும் குன்றாமலே இருந்து வருகின்றன."

## புன்னாலைக்கட்டுவன் கலக வழக்கு

யாழ்ப்பாணம் டிஸ்திரிக் கோட்டு நீதிபதி திரு. எச். ஏ. டி. சில்வா முன்பாக புன்னாலைக்கட்டுவன் வாசிகளாகிய கதிரவேலு இளையதம்பி 1 வேலுப்பிள்ளை - ஆறுமுகம் 2 பொன்னையா - தர்மலிங்கம் 3 இளையதம்பி - செல்லையா 4 கந்தன் மாப்பாணி 5 வைரவன் - சீனியன் 6 முதலிய ஆறுபேர்கள்மீது சென்ற ஆண்டு மார்ச மாதம் 20-ம் திகதி புன்னாலைக்கட்டுவன் என்னுமிடத்தில் சட்டவிரோதமாகக் கூட்டங்கூடி நல்லதம்பி மனைவி நல்லம்மாவுக்கும், கந்தையா மனைவி அருளம்மாவுக்கும் வேறு ஆட்களுக்கும் காயம் வருவித்துக் களவாடியதாகவும் 1 அந்த நேரத்தில் அதே இடத்தில் சட்ட விரோதமாகக் கூட்டங்கூடிப் பலாத்காரம் பிரயோகித்ததாகவும் 2 சட்டவிரோதமாகக் கூட்டங்கூடி நல்லம்மாவின் தாலிக்கொடி, சங்கிலி, புறாச் முதலியவற்றைக் களவாடியதாகவும் 3 சட்டவிரோதமாகக் கூட்டங்கூடிக் களவு செய்யும்போது நல்லம்மாவுக்குக் காயம் வருவித்ததாயும் 4 அந்த நேரத்தில் அதே இடத்தில் சட்டவிரோதமாகக் கூட்டங்கூடி அருளம்மாவுக்குச் சொந்தமான தாலிக்கொடி, காப்பு முதலியவற்றைக் களவாடியதாகவும் 5 அருளம்மாவுக்குக் காயப்படுத்தியதாகவும் 6 முதலியபதினொரு குற்றங்கள் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கோர்ட்டில் ஏராளமான ஜனங்கள் குழுமியிருந்தார்கள். வழக்காளிசார்பாக முடிக்குரிய நியாயவாதி திரு. வ. வி. குலசிங்கமும் எதிரிகளின் சார்பாக நியாயதுரந்தரர் திரு. ரி. சி. இராசரத்தினமும் நியாயதுரந்தரர் திரு. வ. எச். ஆர். அரியகுட்டியும் விவாதித்தார்கள்.

இவ்வழக்கை பொலீஸ் இன்ஸ்பெக்டர் திரு. ரூபன் தொடர்ந்திருந்தார், வழக்காளிபக்க விசாரணை முடிந்ததன்மேல் எதிர்பக்க விசாரணை நடைபெற்றது.

எதிர்பக்க நியாயதுரந்தரர் திரு. ரி. வி. இராசரத்தினம் நீண்ட நேரமாக எதிரிகளுக்காகப் பரிந்து பேசினார். ஈற்றில் டிஸ்திரிக் நீதிபதி 6-ம் எதிரியை விடுதலை செய்து 1-ம், 2-ம், 3-ம், 5-ம் எதிரிகளைக் குற்றவாளிகளாகக் கண்டு அவர்களுக்கு 1-ம் குற்றச்சாட்டிற்கு 2 மாதக்கடூழியச் சிறைத்தண்டனையும் 2-ம் குற்றச்சாட்டிற்கு

தொடர்ச்சி 6-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் தாரணவூ
புரட்டாதிமீ உசஉ திங்கட்கிழமை

## அவரை இவர்கள் வரவேற்காமை பிழையா?

இற்றைக்குச் சிலநாட்களின் முன் இலங்கைச் சுகாதாரப் பகுதி மந்திரியாக இப்பொழுதிருக்கும் மிஸ்ரர் ஜோர்ஜ் ஈ. டீ. சில்வா யாழ்ப்பாணப்பகுதிக்கு விஜயஞ் செய்தபோது, இங்குள்ள பல கிராமவாசிகள் அவருக்கு நடைப்பந்தரிட்டும் வேறு பல செய்தும் உபசரித்துத் தங்கள் தங்கள் கிராமங்களிலுள்ள சுகாதாரக் குறைகளையும் இன்னும் அவரால் தீர்க்கக் கூடியவற்றையும் எடுத்து முறையிட்டார்கள்; அந்த மந்திரியும் தாம் அது செய்வோம் இது செய்வோம் என்று வாக்களித்துப் பிரியாவிடை பெற்று மீண்டார்; அவ்வளவோடு மாத்திரம் அம்மந்திரி அமைதல்லர், யாழ்ப்பாணத்து [illegible] ...... [illegible] ...... [illegible] ...... [illegible] என்று கூறுதல் [illegible].

சுகாதார மந்திரி சொன்ன [illegible] ...... [illegible] ...... [illegible] கூறியதாக அறியலாம்.

“அவர்களுள் ஒருவரை (திரு. மகாதேவாவை) [illegible] ...... சுகாதார மந்திரி முறையிட்டிருக்கின்றார்......”

என உதயதாரகைப் பத்திராசிரியரும் சொன்னது பகர்ந்துள்ளார். தாரகை ஆசிரியர் இவ்வளவோடு விடவில்லை; இன்னும் வரைகின்றார்:-

மேலே எடுத்துக் காட்டப்பெற்ற பல தேவைகளைக் கொடுக்க மந்திரியார் தயாராயிருக்கின்றார்; இவைகளைச் சுகாதாரமந்திரியினுடைய மனசில் உறுத்திவிட வேண்டியவர்கள் பிரதிநிதிகளாவர்; அவர்கள் வேறுமுயற்சியிற் போய்விட்டதினால் இவற்றைக் காத்திரமாய் எண்ணாது விட்டனர் போலும்.”

என எங்கள் யாழ்ப்பாணப் பகுதிப் பிரதிநிதிகள் மூவர் மீதும், சுகாதார மந்திரியோடு சேர்ந்து அந்தப் பத்திராசிரியரும் தோஷஞ் சுமத்துகின்றார். உண்ணாட்டு மந்திரியாகவிருக்கும் மகாதேவனவர்கள் சுகாதார மந்திரியோடு உடன் சென்றது, இங்குள்ள குறைகளை அந்த மந்திரிக்கு எடுத்து விண்ணப்பஞ் செய்தற்கல்ல, [illegible] மிஸ்ரர் சில்வாவும் உதயதாரகைப் பத்திராசிரியரும் உணர்ந்துகொள்ளல் வேண்டும். இதற் சந்தேகமிருந்தால் உண்ணாட்டு மந்திரியை [illegible] கேட்டுத் [illegible] நீக்கிக் கொள்ளலாகும்.

இனி, ஏனைய பிரதிநிதிகள் [illegible] ...... [illegible] ...... [illegible] ...... [illegible] போதிக்கத் துணிந்த சுகாதார மந்திரிக்கு அவர்கள் [illegible] ப்பர் உபசரிப்பற்ற மந்திரியாரும் அந்தப் பத்திராசிரியரும் எப்படி எதிர்பார்த்திருக்கலாம்? சுகாதார மந்திரியின் வரலாறு முழுவதையும் குறித்த பத்திராசிரியரெடுத்துக் காட்டியும் தமிழ்ப் பிரதிநிதிகள் மூவரும் [illegible]; அப்பத்திராசிரியர் தாம் தமிழர் குழுவைச் சேர்ந்தவராயிருந்து கொண்டும், தக்க காரணம் யாதுமில்லாது தமிழ்ப் பிரதிநிதிகளைக் குறை கூறத் துணிப்பட்டமை “......நமது, சாதிகளெல்லாம் ஒரு வயிற்று, தாத், தான் பிறந்தாய் வந்து நடுவே” என்ற விதமாகவல்லவா இருக்கின்றது. பொறுப்புவாய்ந்த பத்திராசிரியர்களென்றிருப்பவர்கள் இப்படித் தம் மனம் போனவாறெல்லாம் வரைவதனால் வரும் நன்மை யாதுமில்லையாம்.

## “மாரித்தவளை கத்தின பான்மையாம்”

இந்த அக்டோபர் மாதம் 2ந் தேதி நடைபெற்றதாகிய மகாத்மா காந்தி ஜனனதினத்தைப்பற்றி உதயதாரகைப்பத்திராசிரியர் தமது அக்டோபர் 6-ம் தேதிப்பிரசுரத்திலே “......மேடைகளிலிருந்து சுவாசாசயங் கிழிக்க உரத்துப் புலம்பிப் பேசியுமென்ன பலன்? அவர் சீவிக்கிற பிரகாரஞ் சீவியாதிருப்பின் இவையெல்லாம் மாரித்தவளைகள் கத்தினபான்மையாயிருக்குமல்லவா; பிரயோசனமின்மை மாத்திரமன்று விடியுமுன் தவளைகள் முடிந்துபோம்” என்று ஆசங்கைசெழுத்தி அக்கூற்றுக்கு ஒருவடித்துக் காட்டும் வரைகின்றார். மகாத்மா காந்தி சீவிக்கிற பிரகாரஞ் சீவிப்பவர்கள் தாம் அவரைப்பற்றிப் பேசலாகும், ஏனையோர் பேசலொண்ணாதென்பதா தாரகையாசிரியருடைய நியாயம்? அந்த மகாத்மாவிடத்தில் ஆர்வம் பற்றியவர்கள் அவரைப் பின்பற்றித் தம்மாலியன்றவரையில் நடப்பவர்கள், அவருடைய கொள்கைகளைப் பாராட்டுபவர்கள் அவரைப்பற்றிப் பேசினால் தோஷமா?

“நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே —நல்லார்
குணங்க ளுரைப்பதுவு நன்றே யவரோ(டு)
இணங்கியிருப்பதுவு நன்று”

என்ற ஆப்த வாக்கியத்தில் நல்லார் குணங்களுரைப்பதுவும் நன்றே யென்பதைத் தாரகையாசிரியர் மறக்கிறாரா? கிறீஸ்துவைப்பற்றிப் போதிப்பவர்களாகிய போதகர்களெல்லோரும் சீவிக்கின்றார்களா? பெரியாரைப் பின்பற்றி வாழ முயற்சி செய்வார்க்கும் பெரியாரைப் பின்பற்றிப் பேசுதற்கு அதிகாரமுண்டென்பதைத் தாரகையாசிரியர் உணர்தல் வேண்டும். உலகத்திற் பலராலும் போற்றப்படும் மகாத்மா காந்தியையிட்டுப் பேசுபவர்களை மாரித்தவளைபோற் கத்துபவர்களென்றும் தவளைகள் முடிவதுபோல் விடியுமுன் முடிவரென்றும் குறிப்பிட்டெழுதுவது சிறந்த பத்திராசிரியரின் மரபாகாதென்பதையிட்டுக் கவலைப்படுகின்றோம். அவர்களை மாரித்தவளைக்கு ஒப்பிடின், அத்தவளை [illegible] ஒரு முறை பல பத்திராசிரியருக்கு உவமானமெடுத்துக் காட்டலுஞ் சாலும் போலும்.

‘பொல்லாது சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுத்தும் —நல்லாய்
மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்
நுணலுந்தன் வாயாற் கெடும்”

## பூச்சியைக் கொல்லும் மருந்து

### ஹைதராபாத்தில் தயாரிப்பு

ஹைதராபாத் அக் 7—

யுத்தப் போக்கு சம்பந்தமாகச் செய்த தமது பிரசங்கத்தில் போரின் பலமுனைகளிலும் நேசதேசத்தினரால் விரிவாக உபயோகிக்கப்படுமென சர்ச்சில் கூறிய பூச்சிகளைக் கொல்லும் கொடிய மருந்து அரசாங்கக் கைத்தொழில் ஆராய்ச்சிச்சாலையில் தயாரிக்கப்பட்டுவருகிறது. ஐந்து ரூத்தல் மருந்து இதுவரை செய்யப்பட்டிருக்கிறது. மேலும் நூறு ரூத்தல் தயாராகி வருகிறது. இது ஓர் ரூத்தல் விலை ரூபா இருபதாகிறது. ஈக்கள், [illegible] பூச்சிகள், சாய உண்ணிகள் முதலியவற்றை இம்மருந்து அழித்துவிடும். பயிர்வகைகளையும் பழங்களையும் நாசம்செய்யும் பூச்சிகளைக் கொல்லவும் இதை உபயோகப்படுத்தலாம்.

## கடிதம்

### வளர்ந்தோர் வகுப்பு

ஏழாலையில் வளர்ந்தோர் வகுப்பொன்று ஆரம்பிக்கும் நோக்கமாகச் சென்ற புரட்டாதி மீ 18ந் திகதி மாலை 7 மணியளவில் ஏழாலை அரசினர் பாடசாலை மண்டபத்தில் சைவவித்தியாசாலைத் தலைமையாசிரியர் திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் ஓர் கூட்டம் கூட்டப்பட்டது. தலைவர் அவர்கள் வளர்ந்தோர்வகுப்பு ஏற்படுத்துவதனால் ஊரவர்களுக்கு ஏற்படக்கூடிய நன்மைகளையும் இவ்வகுப்பு நடத்துதல் மூலமாகப் பிறதேசங்களடைந்துள்ள பலாபலன்களையும் சுட்டி விரிவுரையொன்று நிகழ்த்தினர். அதன்மேல் அப்பாடசாலைப் பிரதம ஆசிரியர் ஸ்ரீமான். சீ. யோசேப் அவர்கள் இவ்வகுப்புத் தளராமல் நடத்தப்படவேண்டுதற்கு ஏற்ற ஒழுங்குகள் செய்யப்படவேண்டுமென்றும் தாம் இதற்காகவேண்டிய சகல உதவிகளும் செய்வதாகவும் மனமுவந்து கூறினர். அதன்மேல் இவ்வகுப்பு இப்பாடசாலையிலேயே திரு. யோசேப் அவர்களாலேயே இன்றே ஆரம்பிக்கப்படவேண்டுமென்ற ஒரு பிரேரணை ஏகமனதாக நிறைவேறிற்று.

அன்று ஐந்து மாணவருடன் ஆரம்பிக்கப்பட்ட இவ்வகுப்பு ஆசிரியரும் மாணவரும் கொண்ட ஆர்வம் [illegible] இன்று இருபத்தைந்து மாணவர்களைக்கொண்டதொரு பெரும் வகுப்பாய்த் திகழ்கின்றது. இவ்வகுப்பில் பிரதானமாக ஆங்கிலமும் வாழ்க்கைக்கு சம்பந்தமான விஷயங்களும் கற்பிக்கப்படுகின்றன. ஆங்கிலத்தில் ‘பேசிக்’ முறை கையாளப்பட்டு வருகின்றது. ஆங்கில அறிவில்லாத தமிழ் ஆசிரியர்கள் ‘ஜே. எஸ். சீ.’ பரீட்சைக்குத் தோற்றச் சித்திபெய்தற்கனுகூலமான பாடத்திட்டமும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றது. இவ்வகுப்பு தினந்தோறும் இரா 7 மணிமுதல் 9 மணிவரை நடைபெற்று வருகின்றது. [illegible] ஒருநாள் அறிஞர்களைக்கொண்டு சொற்பொழிவு செய்விப்பதற்கும் இவ்வகுப்பில் ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

ஆர்வமுள்ள பெரியார்கள் பலர் இவ்வகுப்புக்குத் தங்கள் மனப்பூர்வமான உதவியை அளித்தமையால் இவ்வகுப்பு ஆண்களுக்கு மட்டுமே நில்லாது பெண்களுக்கும் பிரத்தியேகமான ஒரு வகுப்பு ஒழுங்கு செய்யப்படுவதற்காக முயற்சிகளும் செய்து வருகின்றார்கள். இவர்களுடைய நல்லுள்ளம் இதனையும் கூடிய விரைவில் ஆக்கி வைப்பதாகுக. பெண்களுக்காக ஆரம்பிக்கும் வகுப்பு தினந்தோறும் பின்னேரம் 4 மணி தொடக்கம் மாலை 6 மணி வரையில் நிகழும். இவ்வகுப்பு பெண்களாலேயே நடத்தப்படும்.

இவ்விரு வகுப்புக்களும் இவ்வூருக்கும் பெரும் முன்னேற்றத்தையும் செழிப்பையும் அளிக்கக்கூடிய முறையில் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து மற்றைக் கிராமங்களுக்கும் ஓர் நன் முன்மாதிரி காட்டி விளங்கவைக்குமாறு எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்,
கா. வல்லிபுரம்.
ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதியாரின் கவிப்பண்பு

வி. கே. பி. என்.

தமிழ்த்தாயின்மீது ஆங்கிலம் படையெடுத்தது. தமிழன் ஆங்கிலர் வேஷத்தையும் பாஷையையுங் கண்டு மோகித்தான். தன் தாயை மறக்கலானான். தன் தினசரி வாழ்க்கையில் —கடிதப்போக்குவரத்தில் கூடத் தமிழன் ஆங்கிலத்தையே உபயோகிக்கத் தலைப்பட்டான். தன் ஐந்தாண்டுக் குழந்தை 'டியர்ப்பபா' (DearPapa) என்ற மொழிவதைக் கேட்டுத் தந்தை ஆனந்தக் கண்ணீர் சொரிந்தான். பொதுமக்களின் நிலை இவ்வாறிருக்க, அப்போதைய தமிழ்ப்பண்டிதர்கள் தமிழின் தொன்மையான இலக்கியத்தைக் கடல்கொண்டு போய்விட்டதென்று கூறித் தமது கடுமையான சிலேடைகளில் புதிய ரசனைகளை இயற்றித் தாயை அலங்கரிப்பதாக வீறுப்புப் பேசினர். இந்நிலையில் தமிழ்த்தாய், ராஜ்யத்தையும், வைபவத்தையும், ஆதரத்தையும் இழந்தவோர் அரசிளங் குமரிபோலத் தன் துன்பநாட்களைக் கடத்தி வந்தாள். ஆனால், அவளுக்குத் தன் நீள் தவத்தின்மீது நம்பிக்கை இருந்தது. "யான் இரண்டு வரப்புதல்வர்களைப் பெறப் போகின்றேன்" என்ற ஆசையும் திடமும் அவளுக்கு இருந்தது. அவளது ஆசை—அந்தத் திடம்—அந்தத் தவம் நிறைவேறியது. கவிக்குயில் பாரதியாரையும், மகா மகோபாத்தியாயசாமிநாதய்யரையும் தக்க தருணத்தில் தோன்றுவித்தாள்.

இவ்விருவர்களில் பாரதி நவீன யுகத்தை ஸ்தாபித்தவர்; சாமிநாதய்யர் தமிழனின் ஒவ்வொரு நாடியிலும் அவனுடைய பண்டைப் பெருமையின் நினைவை மின்சாரத்தைப் போலப் புகுத்திவிட்டார். ஒருவரின் லக்ஷியம் உலக இலக்கியத்தின் புதிய பீடத்தில் தமிழுக்கு முதன்மையான ஸ்தானத்தை அளிக்கச் செய்வது; மற்றவரின் லக்ஷியம் உலக இலக்கியத்தின் பண்டைச் சரித்திரத்திலே தமிழுக்கு ஏற்கெனவே ஏற்பட்டிருந்த தொன்மையையும் மேன்மையையும் மீண்டும் நிலைநாட்டுதல். தத்தம லக்ஷியங்களுக்கேற்ப இருவரும் தத்தம வழியே சென்றனர். ஆனால் அவர்களுக்கிடையே நெருங்கிய ஒற்றுமை இருந்துவந்தது. ஒருவர் பட்டம் பெற்றபோது மற்றவர் பாடலால் அமரத்வம் கொடுத்தார்.

பாரதியாரின் இலக்கியம் கடகடவென்று முழக்கம் செய்யும் மாரிக்கால இடி; குப்பை கூளங்களைப் புரட்டிச் செல்லும் புயல்; மக்களிடையே சௌரியத்தைப் பொழியும் கதிரவனின் கடுங்கிரணக் கூட்டம்; மாந்தரின் நெஞ்சகங்களிலே புரட்சியை உண்டுபண்ணும் தெய்வீக உணர்ச்சி. ஐயரவர்களின் இலக்கியநடை சாந்த (பசிபிக்-Pacific) மகாசமுத்திரத்தில் மூழ்கி முத்தெடுக்குஞ்சாதகர்களை அழியாச்சாதனையின் பிடிப்பு; ஓயாஉழைப்பும் பொறுமையும் கலந்தமைந்த உரு; தமிழ்மக்களின் தேசோமயமான காதல்; நம உள்ளத்திலே பண்டைப் பெருமைகளையும் சாந்த ரசத்தையும் நிரப்பும் பவித்திர உணர்ச்சி. இவ்விருவர்களையும் பெற்றுத் தமிழ்த்தாய் மீண்டும் கர்வத்தோடு தலைநிமிர்ந்து நின்றாள்.

தமிழன் தவத்தினால் பாரதியார் அகாலத்தில் மறைந்துவிட்டாரெனினும், அவர் தம ஸ்தானத்தில் தம்மைப்போன்ற சிலரைச் சிருஷ்டித்து விட்டுச் சென்றார்.

## கவியின் வாழ்க்கை

1882ம் வருடம் நவம்பர் மாதத்தில் எட்டயபுரத்தில் பிறந்தார். சி. சுப்பிரமணியன். தமது ஐந்தாவது வயதில் தாயை இழந்தார். அதேவருஷம் திருநெல்வேலி இந்து கலாசாலையில் கல்விபயில அனுப்பப்பட்டார். ஆங்கு மூன்று வருஷங்கள் படித்தார். பள்ளிப் படிப்பை வெறுத்த பாலகவி தாகூரைப் போலவே, இவரும் அதை வெறுத்தார். பள்ளிக்கூடத்துக்கு வந்தனமளித்துவிட்டு வெளியே வந்தார். பதினோராவது வயதிலேயே இவ்வரகவி பாடிய கவிதைகளைக் கண்டு புலவர் பலரும் வியந்து இவருக்குப் "பாரதி" என்ற பட்டஞ் சூட்டினர்.

"பிள்ளைப் பிராயத்திலே—அவள்
பெண்மையைக்கண்டு மயங்கி
விட்டேனங்கு
பள்ளிப் படிப்பினிலே—மதி பற்ற
வில்லை"

என்று தமது வெள்ளைப் பண் மகள் காதலைப் பாரதியாரே குறிப்பிடுகிறார். 1897—ல் பாரதியின் திருமணம் நடந்தேறியது. அதே வருஷத்தில் அவர் தந்தையு மிறந்தார்.

"தந்தை போயினன் பாழ்மிடி
சூழ்ந்தது;
தரணி மீதினி லஞ்சலென்
பாரிலர்"

என்கிறது அவருடைய சுயசரிதை. பின்பு அவர் காசியில் தம் அத்தையிடம் சென்று வளர்ந்து, அங்கு பள்ளிக்கூடத்தில் ஹிந்தியும், சமஸ்கிருதமும் பயின்றார். 1901-ல் கல்கத்தா சர்வகலாசாலையின் பிரவேசப் பரீட்சையில் தேறினார். அதே வருஷத்தில் அவர் ஜமீந்தாரின் அழைப்புக்கிணங்க எட்டையபுரம் வந்து மூன்று வருஷம் வரையில் அங்கு வேலை செய்தார். அந்தப் பன்னிரண்டு ரூபாய்ச் சேவகமும், பூவியாசன் கீழ்க் கவிராசன் பணிவதும் அவருக்குப் பிடிக்கவில்லை. ஆங்கிருந்து விலகியபின் அவர் மூன்றுமாதம் மதுரை சேதுபதிப் பள்ளிக்கூடத்தில் தமிழ்ப்பண்டிதராக இருந்தார். விடுதலைவீரன் எங்காவது கட்டுண்டிருப்பானோ?

"நமக்குத் தொழில் கவிதை
நாட்டிற் குழைத்தல்
இமைப் பொழுதுஞ் சோரா
திருத்தல்"

என்ற விரதத்துடன் அவர் 1904ல் சுதேசமித்திரன் உதவியாசிரியரானார். பின்னர் இரண்டுவருஷங்கள் "இந்தியா"வுக்கும், "பாலபாரத" மென்ற ஆங்கில பத்திரிகைக்கும் ஆசிரியராக இருந்து வீரசுதந்திர முரசு கொட்டினார். 1908ல் 'இந்தியா' அச்சுக்கூடத்தின் பயனாக் கிளம்பு போயிற்று. அப்போதைய சென்னை அரசாங்கத்தின் சினத்திற்குப் பாத்திரரான பாரதியாரும் புதுவை புகுந்தார். அங்கே ஸ்ரீ அரவிந்தரைக் கூட்டுறவால் அவர் கவிதையிலே ஓர் சக்தி பிறந்தது. இருவரும் மிகவும் நெருங்கிய நண்பர்களாகவே, அரவிந்தரின் 'ஆர்யா'வில் பாரதியாரின் கட்டுரைகள் வெளியாகிவந்தன. இவரும் ஸ்ரீ அரவிந்தரைப் புகழ்ந்து பாடல்கள் பாடியிருக்கிறார். அரவிந்தரையே கந்தின கொள்கைகளைப் பாரதியாரின் நூல்களில் ஆங்காங்கு காணலாம். அரவிந்தரைப் போலவே 'இங்கு தேவர் சங்கம கூடும்' என்கிறார் பாரதியாரும். அரவிந்தர் குளிச்சம் முதலான கொள்கைகளின் ...... பாரதியார் பெற்ற ......

தொடர்ச்சி 6-ம் பக்கம்

# கந்தபுராண அருஞ் செய்யுட்கள்

(திருமயிலை திருவாளர் சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை அவர்கள்)

(முற்றொடர்)

சேண்மையின் முனிவ ராமேனோர்
நுவலருங் காட்சி நந்தி
கான் முறை வணங்கி நிற்பவனை
யவன்கருணை தன்னால்
வான்மலி கடவுட் கோயில்
மந்திரங் கொண்டு செல்ல
நான்முகன் முதலோர்க் கெய்தா
ஞான நாயகனைக் கண்டார்.

சிவபிரான் ஞானக்கண்கொண்டு பார்ப்பவர்களுக்கே புலப்படுவர். ஏனையோர்க்குப் புலப்படாரென்பது தோன்ற "ஞானநாயகன்" என்றார். பிரமனும் திருமாலும் ஞானக்கண்கொண்டு பாராமையால் அவர்களுக்கு எம்பிரான் வெளிப்பட்டாரலலர்.

மணிகொண்ட நெடுங் கடலில்
விழிவளரு மாதவனும்
அணிகொண்ட புண்டரிக மலரத
சதுமுகனும்
ஞானக் கண்ணது கொண்டு
காடுமா றுணராதே
ஏனத்தின் வடிவாய் மெகினத்தின்
வடிவாகி
அடிதேடி யறிவலென வவனி
யெலா முழுகிடந்தும்
முடிதேடி வருவலென முதண்ட
மிசைய பறந்துங்
காணரிய வொரு பொருளாய்க்
களங்கமற விளங்கு பெருஞ்
சோணகிரி யெனக் கிறைந்த சுடர்
ரொளியாய் நின்றருள வோய்.

என்னும் திருவருணைக் கலம்பகச் செய்யுள் இங்கே நோக்கத்தக்கது.

மண்ணவரமரா யாவரை வணங்கினு
மவைக ளெல்லா
நண்ணிய பரமன் றனின்ற
மெய்நூல் தவத்தின்றுருக்
கண்ணனி நெறிமுற பலகாற
ரூபகதன ரொழுந்து நின்று
பண்ணிசை மலர்கள் தம்மாற
முத்தலை பகர்ந் துறந்தார்.

இக்கருத்தையே கொண்டு ஏனைவரும் அடிகளும்:-

"எவ்வெவர் தன்மை யேனும்
யாவர்மெய்யனினும் போற்றின
அவ்வவ ரிடமாக கொண்டு
அவர்க்கருள் தருவாய போற்றி"
"யாதொரு பொருண யாவரிறைஞ்
சிறு மதம்பாய புகக்கண
ஆதியை யடையுமமா"
(கந்தபுராணம்)

நாகமார் சடிலத் தண்ணல்
நடம்பெருந் தவநு முய்ய
யோகுசேர் நிலைமை காட்டு மொரு
கணத் துயிலை யொமல
வாகைவேல் தானுற்ற மையனும்
புணர்ப்புகற
ஆக்கயா வல்லிமலை மவனென்
னை தெரிந்தனமே,

இக்கருத்தையே கொண்டு பின்வரும் திருவருணைக் கலம்பகச் செய்யுளும்.

எல்லாவுயிர்க்கு முயிராரு னோ சரி
வரைசைவன
ஆலாதணுவு மசையாத தெய்வ
சமீந்தனமே
விலாடன மானிருக்கவும்
யோகம் விளைதவ வங்காட்
புலை இருந்தன வெல்லா வுயிருந்
தம் போகத்தையே.
செங்கண மல்தானும் நானுந்
தேடுமறை கரிதாய் நின்ற
எங்கள் தம்பிராற்கு மேலா
மெண்ணமும் பாதேவு முண்டோ
ஆங்கவன ஞானபோத மறிவருக
குணமதுவிங்கல
தங்குமறை முழுதுமாற்று நலரு
வாகுமனற.

பின்வரும் பாசுரங்கள் இங்கே ...... ...... தேவதேவன்',
(திருவாசகம்

"தேவதேவன் மாதேவன் சிறப்
புடை யீசன் எங்கோன்"
(கந்தபுராணம்)

பெற்றிடுங் குரவரானோர் பிள்ளைகள்
தம்பால் நோயொன்று
உற்றிடிற் பிறரைக் கொண்டு
முறுதுயர் செய்த தீர்ப்பார்
மற்றவர் தம்பாலன்போ வன்கனோ
வதுபோல் நம்பாற்
பற்றிய பவங்கள் தீர்ப்பான்
பரமனு மிவைகள் செய்தான்.

இச்செய்யுள் கருத்தையே பின்வரும் சித்தியார்த் திருவிருத்தம் கூறுவது காண்க:-

தந்தை தாய்பெற்ற தத்தம்
புதல்வர்கள் தஞ்சொலாற்றின்
வந்திடா விடினுறுக்கி வளாரின
லடித்துத் தீய
பந்தமு மிடுவரெல்லாம் பார்த்
திடிற் பரிவேயாகும்
இந்தநீர் முறைமை யன்றோ
வீசனார் முனிவு மென்னல்.

தன்னையே தனக்கொப்ப னிரதி
யைத் தளரே லென்று
இன்னவாறருள் செய்தலு மகிழ்த்
தடி யிறைஞ்சிப்போய்ப்
பொன்னின் மாலைமை யக்கிரி
புகுந்து ஒருபுடை யுற்றான்
வன்ன மாமுகில வரவு பார்த்
துறைதரு மயிலே போல.

இதனோடு பின்வருந்திருக்குறள் ஒப்பிடத் தக்கது.

"தனக்குவமை யில்லாதான் தாள்
சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது"

வேண்டுதல் வேண்டாமை யில்ல
தோர் விமலன் தன்னை
ஈண்டுநீ யிகழ்ந்த தெல்லாம்
யாரைபு மளிக்கு மன்பு
பூண்டிடு குறிகாணற்றான்
புகழ்ச்சியா மன்றி முக்கண்
ஆண்டகை யிபற்கை யெல்லா
மார்கொலோ வறிய வற்பார்.

"வேண்டுதல் வேண்டாமையிலா
னடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில,"

என்னுந் திருக்குறள் இப்பாட்டில் அமைப்பட்டிருத்தல் நோக்கற்பாலது.

எங்குள பெருளுங் கோளு
மீதலுந் தாமே யாகுஞ்
சங்கர னுலக மெல்லாந் தந்திடுங்
கன்னி தன்னை
மங்கல முறைபாற் கொண்டான்
மலைமகன் கொடுப்பவென்றால்
அங்கவனருளி னீர்மை யாரறிந்
துரைக்கற்பாலார்.

அகிலாண்ட நாயகியை இங்கே கன்னியெனக் கூறியதை பின்வரும் சிவஞான சித்தித் திருவிருத்தத்தொடு ஒப்பிடத்தக்கது.

சிவஞ் சத்தி தன்னை யீன்றுஞ்
சத்திதான் சிவத்தை யீன்றும்
உவந்திருவரும புணர்ந்திங் குலகுயி
ரெல்லா மீன்றும்
பவன் பிரமசாரியாகும் பான்
மொழி கன்னியாகும்
தவந்தரு ஞானத் தோர்க்கித்
தன்மைதான் றெரியுமன்றே.

அந்தணர்க்கரண மெல்லா மாற்றியே
முடிந்த பின்னர்த்
தந்தையுந் தாயுமாகி யுலகெலாந்
தந்தோர் தம்மை
மைந்துற வயனும் பின்னர்
மூசந்தனு மதற்குப் பின்னர்
இந்திரன் முனிவர் வானோர்
யாவரு மிறைஞ்சி னுற்றார்.

சிவபிரான்தேவர்களுள் அந்தணராகலின் அவருக்கு அந்தணர்க்குரிய திருமணச் சடங்கு நடந்தது. சிவபெருமானுக்கு அந்தணரென்னும் பெயருளதென்பதை பின்

தொடர்ச்சி 6-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசியற் சீர்திருத்தம்

(வீ. வீரசிங்கம் B. A, J. P அவர்கள்)

I

இலங்கையில் வகுப்புவாத நோயை நீக்கக்கூடிய ஓர் அரசியல் மருந்து எதுவாகும் என்ற ஆராய்வு நடைபெறுகின்றது. அம்மருந்து மந்திரிசபை ஆட்சிமுறையேயாகும் என்று சிங்களத்தலைவர்கள் கருதுகிறார்கள். ஐம்பதுக் கைம்பதால் அதைப் பெற்றுவிடலாம் என்று தமிழர் கருதுகிறார்கள். அண்மையில் ஐம்பதுக்கைம்பது பிரதிநிதித்துவக் கொள்கையைக் கைக்கொள்ளத் தொடங்கிய ஐரோப்பிய வர்க்கத்தார் மந்திரிசபை ஆட்சிமுறை, ஐம்பதுக்கைம்பது பிரதிநிதித்துவம் என்னும் இரண்டும் வேண்டுமென்கின்றனர். மந்திரிசபை ஆட்சிமுறையால், சிலர் சேர்ந்து நடத்தும் துரைத்தனமாகிய சிங்களத் துரைத்தனம் நாட்டில் மிக உயர்ந்த ஆதிக்கம் பெற்றுவிடும். ஐம்பதுக்கைம்பது கொள்கைப்படி, அரசாங்க சபையிற் பெரும்பான்மை வாக்குகளைப் பெறுவதற்கு ஒரு சிறுபான்மை வகுப்பின் ஆதரவை இத்துரைத்தனத்தார் எப்போதும் வேண்டிநிற்க நேரிடுமாதலால், ஐரோப்பிய வர்க்கத்தாருடைய பொருளாதார நலன்கள் இச்சிங்களத் துரைத்தனத்தாருடைய கையில் ஆபத்தின்றி இருக்குமென்று கருதப்படுகிறது. தமிழர்கள் அரசியற் புத்திக் கூர்மையுடையவர்களென்ற நம்பிக்கை இருந்துவருகின்றது. ஆதலால் அரசாங்கசபையிற் பெரும்பான்மைச் சமூகத்தாரின் தொகைக்கும் சிறுபான்மைச் சமூகங்களின் மொத்தத்தொகைக்குமிடையே சமமான பிரதிநிதித்துவம் வேண்டுமென்று அவர்கள் சொல்லும்போது ஏதோ ஒன்றை வைத்துக்கொண்டுதான் அவர்கள் அப்படிச் சொல்லுகிறார்கள் என்று பலரும் கருதக்கூடும். ஆனால், தமிழர்கள் முன் அரசாங்கசபையைப் பகிஷ்கரித்தபோது, இழைத்த பெரிய பிழையை அல்லது ஏமாற்றத்தை மீளவும் இழைத்துவிடவுங் கூடும். தமிழர்களும் மற்றைய சிறுபான்மைச் சமூகத்தினரும் இவ்வுண்மையை உணர்ந்ததும், ஐரோப்பிய வர்க்கத்தாரே மந்திரிசபை ஆட்சிமுறையினால் பெரிதும் பாதிக்கப்படுவர்.

## மந்திரிசபை ஆட்சிமுறை மருந்தாகாது

ஐரோப்பாவில், ஜனநாயக அலை வந்து மோதியகாலத்தில் பிருத்தானிய முறைப்படி தயாரிக்கப்பட்ட மந்திரிசபை ஆட்சிமுறை சிற்சில மாற்றங்களோடு பல ஐரோப்பிய நாடுகளால் கைக்கொள்ளப்பட்டு வந்தது. பலவேறு அரசியற்கட்சிகளுடைய பிரான்ஸ், மந்திரிசபை ஆட்சிமுறையாற் போதிய அளவு கஷ்டப்பட்டுவிட்டது. ஜெர்மனியிலும் இத்தாலியிலும் இம்மந்திரிசபை ஆட்சிமுறை உலக்கை தேய்ந்து உளிப்பிடியானவாறு, குன்றிக் குன்றி, இற்றில அவ்விரண்டு நாடுகளிலும் முறையே நாஜியர் ஆட்சி, பாசிஸ்ட் ஆட்சி என்னும் "ஒரு கட்சி ஆட்சிமுறை"யாக மாறிவிட்டது. இங்கிலாந்திலும் அதன் குடியேற்றநாடுகளிலும் ஒருவாறு மந்திரிசபை ஆட்சிமுறை நிலைக்கின்றது. ஏனெனில், அந்நாடுகளின் பரம்பரைக் கொள்கைக்கு மதிப்புக்கொடுக்கின்றவை. ஆகவே, இப்போதைய நிலைமையில், இம் மந்திரிசபை ஆட்சிமுறையே சிறந்ததென்று அவை கைக்கொண்டொழுகுகின்றன. எனினும், இங்கிலாந்தாரும் சகல அரசியற் குறைபாடுகளுக்கும் வாய்ந்த ஒரேயொரு மருந்து என்று இவ்வாட்சிமுறை கருதப்படவில்லை. இவ்வாட்சிமுறை மெல்ல மெல்லச் சர்வாதிகார ஆட்சிமுறைக்கு இட்டுச்சென்றுவிடும் என்ற சந்தேகம் வளரத் தலைப்படுகின்றது. இவ்வாட்சிமுறை இங்கிலாந்தில் திருப்திகரமாக நடைபெற்றுவருகின்றமைக்குக் காரணம் வேண்டும், இவ்வாட்சிமுறை அந்நாட்டிலேயே பிறந்த முறை-அந்நாட்டின் உள்ளூர் முறையாகும். அந்நாடு ஜனநாயகம், சுதந்திரம் என்பனவற்றிற்குத் தொட்டில் போன்று விளங்கும் நாடாகும்; பின் குடியேற்ற நாடுகளில் இவ்வாட்சிமுறை சித்திகரமாய் நடைபெறுகின்றதென்றால், அந்நாடுகளிற் குடியேறிய ஆங்கிலேயர்களின் இரத்தத்தோடு கலந்த-பாரம்பரியத்தை மதிக்கும் குணமே அங்குங் காரணமாகும். இப் பாரம்பரிய மதிப்பு அங்கு பெருந்தன்மையான கட்சி முறையை ஏற்படுத்திற்று. அதிகாரத்திலிருக்குங் கட்சி, எதிர்க்கட்சி என்னும் இரண்டு தெளிவான கட்சிகள் அங்கு ஏற்படலாயின. கட்சிகள் குறைவாக இருப்பதும், ஒரு கட்சியிலிருந்து மற்றக் கட்சிக்கு மாற்றுவதற்குப் பொதுஜன அபிப்பிராயம் ஆயத்தமாக இருப்பதும் ஆகிய இவையே இங்கிலாந்தில இந்த மந்திரி சபை ஆட்சிமுறை திருப்திகரமாக நடைபெறுவதற்கு உதவி புரிகின்றன.

## இலங்கையில் ஜனநாயகம்

துரதிஷ்டவசமாக, இலங்கையில் ஜனநாயகப் பாதுகாப்புக் குறி தவறிவிட்டது. ஜனங்களுக்காக, ஜனங்களால் நடத்தப்படும், ஜனங்களின் அரசாங்கம் என்பதெல்லாம் ஜனங்களின் அதிகாரத்தைத் தம் சொந்த நலன்களுக்காக உபயோகித்துக் கொள்வதிற் கைதேர்ந்த தனிப்பட்டவர்களும் கோஷ்டியாரும் கைக்கொள்ளும் முறையாகிவிட்டது. ஜனநாயக பாரம்பரியம், ஜனநாயக மனப்பான்மை என்னும் இவைகள் காணக்கிடைக்கின்றில. பொதுஜன அபிப்பிராயம் சோர்வுற்றுவிட்டது—பலவீனமடைந்துவிட்டது. அரசியற் கட்சிகள் இன்னும் ஏற்படவில்லை. இங்கிலாந்தில் நடைபெறுவது போன்று அவை இங்கு நடைபெறுகின்றில. இந்நிலைமையில் ஆங்கிலேய முறையில் ஆரம்பிக்கப்படும் மந்திரிசபை ஆட்சிமுறை இலங்கையில் திருப்திகரமாக நடைபெறமுடியாது. இங்கிலாந்திலுள்ள மந்திரிசபை முறைக்கு வேண்டிய உபகரணத்தை உதவும் அரசியற் கட்சிகளுக்குப் பதிலாக, இலங்கையில் ஆறு வகுப்புவாதக் கட்சிகளிருக்கின்றன. தேர்தற்றொகுதிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள ஜனநாயக உணர்ச்சி மருந்து தடித்த வகுப்புவாதத் திராவகத்தைக் கொண்டதாக இருந்தது. அபேட்சகர்களாய் முன்னிற்போர் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு வகுப்புவாதத் தீயை ஊதி வளர்க்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள்.


## தேவை

மல்லாகம் கோட்டிற்கு அணித்தாயும் கிணறு, கார்க்கொட்டகை ஆதியாம் சௌகரியங்களையுடையதாயும் குறைந்தது மூன்று படுக்கையறைகளையுடையதாயும் உள்ள வீடு ஒன்று வாடகைக்குத் தேவை.

இத்தகைய வீடு வாடகைக்குக் கொடுக்க விரும்புவோர் கீழ்க்காணும் விலாசதாரருக்கு ஐப்பசி மாதம் 15-ந் திகதிக்கு முன்னதாக விண்ணப்பித்துக் கொள்க.

[illegible]
சுன்னாகம்.

G 74 5&9.10.44


## கடிதம்

### "பாதிரி வந்தான் கண்ணைத் திறந்தான்"

இந்த அக்டோபர்மீ 6வ வெள்ளிக்கிழமை வெளியான உதயதாரகைப் பத்திரிகையில், யாழ்ப்பாணத்திலே தாழ்ந்த சாதியாரென மதிக்கப்படுபவரை அந்தக்காலத்திலே பாதிரிமார்தாம் வந்து அவர்களுடைய கண்ணைத் திறந்து அவர்களுக்குக் கல்வியூட்டி அவர்களை உயர்த்தி வைத்தார்கள் என்னும் பொருள்பட எழுதும்போது உதயதாரகைப் பத்திராதிபர், "டைக் வந்தான், ரேட்டைத் திறந்தான்" "பாதிரி வந்தான், கண்ணைத் திறந்தான்" என்று ஏதோவெல்லாம் வரைகின்றார். இது தங்கள் சமய போதகர்களாகிய பாதிரியாரைப் புகழுதற்கும் தாழ்ந்தசாதியாரென்றிருக்கும் எங்களை மிகவுந் தாழ்த்துவதற்குமாக உதயதாரகைப் பத்திராதிபர் எடுத்துக்கொண்ட உபாய எழுத்துப் போலும்.

ஐயா, உதயதாரகைப் பத்திராதிபரே! நீர் எங்களை இப்படிச் சொல்லாமற் சொல்லித் தாழ்த்தாமல் தாழ்த்தத் தலைப்பட்ட காரணமென்ன? பாதிரி வருதற்கு முந்திப் பல்லாயிரக் கணக்கான வருடமாக இந்த யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த எங்கள் மூதாதையரெல்லாருங் குருடரென்று சொல்லுகிறீர்? குருடராயிருந்தவர்களுக்கும் இருப்பவர்களுக்குந்தானே பாதிரி வந்து கண்ணைத் திறக்கக் கூடும்? நோயுடையவனுக்குத் தானே ஔஷதப் பிரயோகம் வேண்டும்; வைத்தியஞ் செய்ய மருத்துவன் வேண்டும். எங்கள் சாதியினருள்ளே அந்தக் காலத்தில் அகக்கண் குருடராக இருந்தவர்களுக்குத்தான் ஒருபோது பாதிரி கண்திறந்திருக்க வேண்டும்; இப்பொழுதும் அகக்கண் குருடானவருக்குத்தான் "பாதிரி கண்திறந்திருக்கிறான்" போலும்; ஆனால் திறக்கப்பட்ட கண்ணும், அடையிலே திறக்கப்பட்டமையினாற் போலும் ஞான வெளிச்சத்தைக் காணக் கூசுகின்றது; ஐயா, தாரகைப் பத்திராதிபரே; தாழ்ந்த சாதியினரெனச் சொல்லப்படுவோர் மிஷனரிமார்க்கத்தில் மாத்திரம் இந்த யாழ்ப்பாணத்திலே இருந்தால் நீர் அவர்களைப் பற்றி உமதுடைய மனம்போனபடியெல்லாஞ் சொல்லலாம், எழுதலாம்; யாழ்ப்பாணத்திலே தாழ்ந்த சாதியார் சைவராகவிருக்கிறார்கள்; கத்தோலிக்க கிறீஸ்தவர்களாகவுமிருக்கிறார்கள்; இவர்களெல்லாருக்கும் இனி, பாதிரி வந்து கண் திறக்க வேண்டுமென்பதா உம்முடைய எண்ணம்? உம்முடைய செயல் வெள்ளாடு நனைகிறதென்று வேங்கை விம்மி விம்மி யழுதவாறிருக்கின்றது; எங்கள் பொருட்டு நீர் முதலைக் கண்ணீர் சொட்ட வேண்டாம். நீலச்சாடிக்குள் விழுந்து இடர்ப்பட்டுப் பின் புறப்பட்ட நரி, தன் மேனியிற் பூண்ட நீல நிறத்தை ஆதாரமாகக் கொண்டு தான் மிருகராஜனாக விரும்பியவாறு, நீரும் ஏதோ எங்கள் பொருட்டு எழுதுவார் போல எழுதி எங்கட்குப் பிரதிநிதித்துவங் காட்டலாமென முயலுகின்றீர்; இப்படி முயல்வீராகில், பின்னர் அந்த நரிபோல நீர் இடர்ப்படவும் வேண்டும்; நான் தாழ்ந்த சாதியனெனச் சொல்லப்படினும் பரம்பரைச் சைவசமயத்திற் பிறந்து அச்சமயத்தை என் குல தருமத்தின்படி தூய்மையுடன் அநுட்டித்து வருகிறேன் என்பதனை அறிந்துகொள்ளும்; நான் கூறுவதில் உமக்கு ஏதும் சந்தேகமிருந்தால் ஒரு நாளைக்கு வசதியாக எங்கள் கிராமத்திற்கு வாரும். எங்கள் சமயாநுஷ்டானங்களையும் தெய்வ வழிபாட்டையும் நேரே பாரும்; எங்கள் பெரியோரால் நடாத்தப்பெற்று வரும் தேவரையாளிச் சைவ வித்தியாசாலையையும் அங்குள்ள உபாத்தியாயர்கள் பிள்ளைகளென்னு மிவர்களுடைய சைவ ஒழுக்கத்தையும் ஆசாரத்தையும் எங்கள்மீது மேல் சாதியினரென்றிருப்போர் காட்டும் அன்பையும், நாங்கள் அவர்களிடத்திற் பாராட்டும் விசுவாசத்தையும் நேரே நீர் தரிசிக்கலாம். மேலும் கிறீஸ்தவர்களுள் உயர்ந்த சாதியாருக்கும் தாழ்ந்த சாதியாருக்குமிருக்கும் வேற்றுமைகளும் அவமதிப்பும் ஆதனூர் வாசர்களாகிய எங்களுக்கிடையே யில்லையென்பதைக் காணும்போது உங்களுக்கு ஒன்றில விருப்பு இல்லையேல் வெறுப்பு உண்டாகுமென்பது நிச்சயம். சைவசமயத்திலே கற்றவர்க்கும் கடவுட்பத்தி உற்றவர்க்கும், அருள்பெற்றவர்க்கும் சாதிபேதமில்லையென்பதை அறிந்துகொள்ள வேண்டும்; இந்த நியாயத்தினாலே தான், திருவள்ளுவர், நந்தனார் முதலிய பெரியார் எல்லாச் சைவமக்களாலும் இன்றும் பூசிக்கப்படுகின்றனர்.

"மிக்க திருவள்ளுவனார் வென்றுயர்ந்தார்கலவிதலம், துய்த்த சங்கத்தார் தாழ்ந்தார்-சோமேசா, உய்த்துணரின் மேற்பிறந்தாராயினுங் கல்லாதார், கீழ்ப்பிறந்துங் கற்றாரனைத்திலர் பாடு" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஐயா, மகிமை வாய்ந்த உதயதாரகைப் பத்திராதிபரே, உம்முடைய பத்திரிகையில் நீர் எழுதும் இப்படியான விபரீதவியாசங்களை, இந்நாட்டிற் சமாதானமாகவிருக்குஞ் சாதியாரைப் பிரித்துப் பிணங்கக் கலகஞ்செய்யத் தூண்டுமியல்பினவென்பதைப் பயபத்தியோடு உமக்கு விண்ணப்பஞ்செய்கின்றேன்.

இப்படிக்கு,
தேவரையாளி வாசி.

## அதென்ஸ் நகரம் காலியாகிறது

லண்டன் அக் 6—

மத்தியதரைக் கடல் பிரதேசத்திலுள்ள நேசநேசத் தலைமைக்காரியாலத்திலிருந்து டேவிட் பிரவுண் எழுதுவதாவது:—

அட்ரியாடிக் கடற்கரைப் பகுதியில் விமானங்கள் மூலமும் கடல் மூலமும் இறங்கிய நேசப்படைகள் பட்ராஸ் என்னும் கிரேக்க நகரைக் கைப்பற்றியதன்மூலம் பெலபோனெஸிலுள்ள பலம்வாய்ந்த ஜெர்மன் தளங்களில் ஒன்றைக் கைப்பற்றிவிட்டனவென்று உத்தியோக முறையில் அறிவிக்கப்படுகிறது.

பிராக் முதல் கிதெதரா வரையுள்ள 700 மைல் நீளமுள்ள கடற்கரையில் பலவிடங்களில இறங்கிய பிரிட்டிஷ் கமாண்டோ படைகளை ஜெர்மானியர் எதிர்த்தனர். அதென்ஸ் நகருக்கு மேற்கே 100 மைல் தூரத்திலும் டிரானாவிற்குத் தெற்கே 80 மைல் தூரத்திலும் பிரிட்டிஷ் படைகள் போரிடுகின்றன.

அதென்ஸ் நகரத்தை ஜெர்மானியர் காலிசெய்து வருகின்றனரென்று அங்காரா ரேடியோ அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத்தட்டு)

**செவ்வாய் அக் 10**

காலை: 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 இசைவகை † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 டி வ மஹமத் இப்ராஹிம் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 குன்னக்குடி வெங்கடராமய்யர் புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5: குன்னக்குடி வெங்கடராமய்யர் புல்லாங்குழல் 5-40 திரைகானம் † 6 இசைப்பயிற்சிப் பாட்டுகள் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 நாமும் யுத்தமும் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 அதே வீட்டில 8 மதராஸிலுள்ளபடி எம் டி பார்த்தசாரதி பாட்டு 9 கர்நாடக ராகங்கள் 22 9-20 ஆங்கிலத்தில செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 ஆ இ ரே வித்வான் கிளாரினெட் 10.00 இசைவேளை † 10-30 முடிவு.

**புதன் அக் 11**

காலை: 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 வானொலி வாத்ய கோஷ்டி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 கே ஆர் வி ராமநாத சாஸ்திரி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கே ஆர் வி ராமநாத சாஸ்திரி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை: 5 டி எஸ் சம்பந்தபிள்ளை வயலின் 5.40 இசைப்பயிற்சி 6 பதம் † 6-30 ஆங்கிலத்தில செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 நாளவாத்தியக்கச்சேரி 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7.45 திரைகானம் † 8-5 நமது தபால்பெட்டி 8.30 டி எஸ் சம்பந்தபிள்ளை வயலின் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 ஐ ஐ (ஆங்கிலம்) 10 ஐரோப்பிய சங்கீதம் 10-30 முடிவு.

**வியாழன் அக் 12**

காலை: 7-45 கீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 குரலவகை † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 டி ஆர் ராமநாதபாகவதர் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 பி எஸ் லலிதாபாய் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை: 5 பி எஸ் லலிதாபாய் பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 டி ஆர் ராமநாத பாகவதர் பாட்டு 6-30 ஆங்கிலத்தில செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7.15 செய்தி விளக்கம் 7-30 அறிவிப்புகள் 7.35 தமிழில் செய்திகள் 7-45 கமலா கிருஷ்ணமூர்த்தி பாட்டு 8 உபபட்டணக் கடமை நாடகம் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 பங்கீடு முறையும் பொதுஜன ஒத்துழைப்பும் 10 00 இசைவேளை 10-30 முடிவு.

## கொழும்பு விவேகானந்த சபையில் காந்தி பிறந்த தினக் கொண்டாட்டம்

உலகம் போற்றும் உத்தமராகிய காந்தி மகாத்மாவின் 75ம் பிறந்ததினக் கொண்டாட்டம், கொழும்புமாநகரில் வாழ் இந்துக்களால், விவேகானந்த சபையின் ஆதரவில், இந்திய அரசாங்கப் பிரதிநிதி திரு. M. S. ஆனே அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் சிறப்பாக நடைபெற்றது.

தேவாரம் பாடப்பெற்றதும், காந்தி மகாத்மாவின்பேரால், திரு. A. K. தம்பிமுத்து அவர்களால், பாக்கள் பாடப்பெற்றன.

மகாத்மாவின் சீரிய சரித்திரம், வாழ்க்கை நோக்கம், தேசதொண்டு முதலியனபற்றி, அக்கிராசனர் திரு. ஆனே அவர்களும் வழக்கறிஞர் N. நடராசா K. C. அவர்களும், திரு. K. இராமச்சந்திரன் அவர்களும் சொற்பொழிவு செய்தார்கள்.

காசுஞ்சென்ற ஆண்டு கல்லூரியாய்

## குருநாக்கல் சைவமகாசபை

ஷை சபை ஆதரவில் 26-9-44ல் சரசுவதிபூசை மிக விமரிசையாக நடந்தது. அத்தருணம் அனுராதபுரி-குருநாக்கல் பகுதி வித்தியாதரிசி திரு. அ. வி. மயில்வாகனமவர்கள் சரசுவதி வழிபாட்டின் தொன்மை, பின்னைய வளர்ச்சி, தற்போதையநிலை என்பனவற்றை அழகுற எடுத்தாண்டார்.

மானம்பூ, அம்புபோடல், தசரா, நவராத்திரி என்பனவற்றின் பிறப்பும், வழக்கும் விளக்கப்பட்டன. சரசுவதி தோத்திரங்களும் பல பாடப்பட்டன. அடியருக்குச் சிற்றுண்டி வழங்கியபின கூட்டம் கலைந்தது என ஷை சபைக் காரியதரிசி அறிவிக்கிறார். —கடிதம்.

## புன்னாலைக்கட்டுவன் கொலை வழக்கு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

3 மாதக் கடூழியச் சிறைத்தண்டனையும் மூன்றாவதற்கு 1 வருடமெனவும், நான்காவதற்கு ஒன்றரை வருடமெனவும் 5-வதுக்கு ஒருவருடமெனவும் எல்லாம் ஏககாலத்தில் அதாவது ஒன்றரை வருடக் கடூழியச் சிறைத்தண்டனை யெனவும் தீர்ப்புக்கூறினர்.

## கந்தபுராண அருஞ் செய்யுட்கள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வரும் திருவிருத்தத்தால் அறியலாம்:-

"தேவதேவன் மாதேவன் சிறப்
புடையீச னெங்கோன்
மூவரில் முதல்வனென்கன் முடிவிற்கு
முடிவாய் நின்றோன்
ஆவியுளாவி யானோ னந்தணன்
ஆதியென்றே
ஏவரை யிசைத்த லம்மா
வெல்லையின் மறைகளெல்லாம்"
முன்னதின் முன்னென
மொழிதலே யெனின்
பின்னதின் பின்னுமாப்
பேசநிற்பால்
அன்னவை யெனி லொழிந்த
தல்லவோ
என்னெனை நினையா
மேத்துகின்றதே.

இதன் பின்வரும் திருவிளையாடற்புராணத் திருவிருத்தத் தோடு ஒப்பிடலாம்,

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப்
பழம்பொருளாய்ப்
பின்னும் புதுமைக்கும் பின்னைப்
பேரொளியாய்த்
தென்னன் மதுரைத் திருவாலவா
யுறையும்
எனையாட்கொண் டெளியேற்
கிரங்காயோ.

ஆதியு நடுவு மீறு மருவு
முருவு மொப்பும்
ஏதுவும் வரவும் போக்கு
மிகப்புகழ் துணையு மின்றி
வேதமுங் கடந்து நின்ற
விமலமே வார் குமரன் றன்னை
நேரால் வணங்குநன்பால்
நினைந்தேய கிர்க்க என்றார்,

"ஆதியு மந்தமுமில்லா அரும
பெருஞ்சோதி"

ஆதியாய நடுவுமாகி அளவிலா அளவுமாகி என்னும் திருவாசக பெரியபுராணப் பாக்களின் கருத்தைக் கொண்டது இவ்விருத்தம்.

காந்தி அவர்களின் ஞாபகநிதிக்காகச் சபையாரால் சேர்க்கப்பெற்ற ரூபா 1001 நிதிக் காரியதரிசிக்கனுப்பப்பட்டது.

மகாத்மாஜி ஆற்றிவரும் அரியதொண்டை இன்னும் பலவாண்டு மனப்பதைக் காற்றிவர, பரமேஸ்வரன் திருவருளை வேண்டிப் பிரார்த்தனை செய்வதாகவும், இம் சமூர்த்திக்குச் சபையின் அன்புப்பணைவைக் காட்டுவதாகவும், காந்தியடிகளுக்கு ஒரு செய்தி அனுப்பப்பட்டது.

## நிலாவரை வாயிலாக நீர்ப்பாய்ச்சுதல்

4-ம் பக்கத் தொடர்ச்சி

திலகமாகத் திகழச் செய்வார். இவர் காம்செய்த தவப்பயனால் சமீபத்தில் யாழ்ப்பாணத்துக்கு வந்தாரல்லவா, அவ்வமயம் இந்த புத்தூர் வற்றா வாவியையும் சென்று தரிசித்துள்ளார், இசகளஞ்சியத்தைக் கண்டு களித்தாராம், இப் பொக்கிஷசாலையைக் கண்டு திறந்து கைவைக்கிறார். இவரது அரிய - உண்மையான நேர்மையான-மனச்சாட்சியான தன்மைகளை உணர்ந்தல்லவா அரசாங்கம் "பொதுசன பாதுகாப்புக் கொமிஷனர்" என்ற பெரிய பொறுப்பைக் கொடுத்திருக்கிறது. அவர் தமது கடமையையும் தொண்டையும் எந்நேரமும் உணர்ந்து கொண்டு இருக்கின்றார். புத்தூர் வாவியைப் பற்றியும் உணர்ந்தார். கிளிநொச்சி வாசிகள் வமந்ததுபோல எங்களையும் வமாவிடமாட்டார். எங்களுக்கு இவ்விஷயத்தில் நல்ல நம்பிக்கையுண்டு, அவர் புத்தூர் வற்றா வாவியிலிருந்து நீர்ப்பாய்ச்சுவதற்கு வசதிகளை தமது கூடியசீக்கிரத்தில் எடுப்பார். ஆனால், அவரையும் அரசாட்சியாரையும் நாம் எந்நேரமும் தூண்டிக்கொண்டே இருக்கவேண்டும். ஞாபகமூட்டுவது நமது கடமையல்லவா! புத்தூர் வாவியைப் புனிதமாக்குவது அவர் கடமை. உள்ளதை அதாவது கையிலுள்ளதைக் கவனியாது விட்டு அரிபதற்கு எய்தப் பொருள் தேட நாம் எண்ணுதல் நல்லதா? அன்றி உள்ளதைப் பயன்படுத்தல் நல்லதா?

அரிய பெரியோர்களே! அறிஞர்களே! தனவான்களே! ஆசிரியர்களே! உணர்ச்சியுள்ள உத்தியோகஸ்தர்களே! மனத்திடமுள்ள மாணவர்களே! இவ்வரிய சந்தர்ப்பத்தை நீங்கள் கைவிடக்கூடாது. உங்களுடைய கிராமங்களிலும் ஊர்களிலும் "யாழ்ப்பாண நீர்ப்பாசன மகாநாடு" கூட்டுக. வற்றாவாவியைப்பற்றிய பிரேரணைகளையும் அபிப்பிராயங்களையும் சீக்கிரத்தில் நீர்ப்பாசனப் பகுதி அதிகாரிக்கு அனுப்புக. தனிப்பட்ட முறையிற் கடிதங்கள் எழுதி மனுக்கொடுக்க. நகர சங்கங்கள், கிராமச்சங்கங்கள், ஐக்கிய நாணய சங்கங்கள், பண்டகசாலைச் சங்கங்கள், மற்றும் ஸ்தாபன சங்கங்கள், ஆசிரிய சங்கங்கள், மாணவ சங்கங்கள் எல்லாப் பொதுஸ்தாபனங்களும் யாழ்ப்பாணத்தவாக்கு நாகாத் தாலகையின் பல பாகங்களிலும் பகுதிக்கூட்டங்கள், பகிரங்கக் கூட்டங்கள், பொதுக்கூட்டங்கள் கூட்டி பிரேரணைகள் நிறைவேற்ற வேண்டியவேண்டிய இடங்களுக்கு அனுப்புக. பத்திராதிபர்களுக்கு தங்கள் அபிப்பிராயங்களைத் தீட்டுக. இதைப்பற்றிய விஷயங்களையும் அறிக்கைகளையும் பிரசுரம் செய்து நாட்டுக்குத் தெரிவிக்கவும். தொண்டு செய்யுந் தருணம் இதுவே. ஒருவருக்கு வருடமொன்றுக்கு வரை ரூபா செலவுடன் நீர்ப்பாய்ச்சும் நாளை எதிர்பாருங்கள், "யாழ்ப்பாணத்தின் செல்வம் கண்குளிரும் புத்தூரிற் காட்சியளிக்கும் நிலாவ

## பாரதியாரின் கவிப்பண்பு

3.ம் பக்கத் தொடர்ச்சி

1918ல் புதுவையை விட்டகன்று வந்து, பாரதியார் தம் குடும்பத்துடன் கடையத்திலும், எட்டையபுரத்திலும் வசித்தார். 1920ல் மீண்டும் சுதேசமித்திரனின் உதவியாசிரியர் பதவியை ஏற்றார். 'எல்லா உயிர்களிலும் நானே இருக்கிறேன் என்றுரைத்தான் கண்ணபெருமான்' என்ற சித்தாந்தத்தைத் தம் வாழ்க்கையில தரிசித்து அனுபவித்த அவ் வேதாந்தி பார்த்தசாரதிக் கோயில் யானைக்கு வாழைக்கனி அளித்தார். அவருடைய அன்பை யறியாத யானை அவரை உதைக்க, தன் பயனாக நோயுற்று, 1921ம் செப்டம்பர் 11உ அன்று தமது 39 வது வயதில் விண்ணுலகெய்தினர். 'செய்தொழிலொப்பு நோக்கின் அருமையே கொல்லாமென்று விண்ணுலகடைந்து விட்டாய்;' என்று பாரதியார் ஸ்ரீ ரவிவர்மாவின்மீது பாடிய பாடல் அவர் விஷயத்திலேயே மெய்யாயிற்று.

### பாரதி ஓர் சித்தர்

'எனக்கு முன்னே சித்தர் பல
ரிருந்தாரப்பா
யானும் வந்தேனொரு சித்தனிந்த
நாட்டில'

என்று அவர் தாமே எழுதுகிறார். குழந்தையினிடத்தும் காக்கை குருவியினிடத்தும் பரமாத்மனின் சாயலைக் கண்டு பேரின்பத்தை அனுபவித்தவர் அவர். மேன்மாடியிலிருந்து குழந்தை கீழே தவறிவிழுந்து இறக்கும் தருணத்தில் மனம் பதறாமல 'ஓம் சக்தி' என்ற மந்திரத்தைச் சாந்தமாக உச்சரிக்கும் பேரறிவை நாம் வேறு எங்கே காணமுடியும்! பாரதியாரின் முழுச் சரித்திரமும் இன்னும் சரிவர எழுதப்படாதது தமிழர்களின் மாபெருங் குறையே.

பாரதியாரை எம்மில் அனேகர் நேரே காணும் பாக்கியம் பெறவில்லை. ஆயினும் புகைப்படங்களிலே காணும் அவருடைய திருவுருவம் நம் மனக்கண்களில் நன்கு பதிந்திருக்கின்றன. தலையில் கட்டிய சிகப்புப்பாகை; உக்கிரத்துடன் முறுக்கிவிட்ட மெல்லிய மீசை; கழுத்து கறுப்புச்சட்டை கழுத்தில மாலை; ஆங்கிலேயர்களின் ஆணவத்தையும், தமிழர்களின் தாழ்நிலையையும் கண்டு கொதிக்கும் உள்ளம், பிஜித்தீவில் துன்புறும் பெண்களுக்கு நேர்ந்த கொடுமையைக் கண்டு கனிந்துருகும் உள்ளம், எல்லாவற்றிற்கும் மேலாக, அவ்வுள்ளத்தை வெளிக்கொணர்ந்து காட்டுகின்றவையும், அவருடைய முகத்தில் விளங்கும் வதனவட்டத்தில் சூரிய சந்திரர்களைப்போல் மிளிர்கின்றவையுமான பிரகாசமான விழிகள்! பாரதியாரை என்றும் மறவாமலிருக்க அவ்விழிகளே போதும். (வரும்)

யை என்னும் வற்றாத வாவியாகிய பொக்கிஷசாலை பொங்கி வழிக! எங்கும் பெருகுக! புகழ் தங்குக."

ஊழியன்
V. K. கதிரேசு
காரியதரிசிக்காக
3—10—44

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday, 9, October, 1944.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org